நாள்:20.06.2023

சி.சி.440/2021

புசா.1

பெயர் :பிரகாஷ்

த/பெ. பெருமாள்

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:

1. நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் நான் சட்டப்படிப்பு இளங்கலை பட்டம் பெற்றுள்ளேன். இன்னும் வழக்கறிஞராக பதிவு செய்யவில்லை. 2010 - 2013 வரை சட்டப்படிப்பு படித்தேன். 2013 ம் வருடம் முதல் தற்போது வரை P.ஆண்டனி அரவிந்த் என்ற வழக்கறிஞருக்கு உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். எனது மாத வருமானம் என்ன என்றால் தோராணயமாக ரூபாய் 10 ஆயிரத்திற்கு உட்பட்டிருக்கும்.

2. எதிரியை எனக்கு எவ்வாறு பழக்கம் என்றால் நான் பணிபுரியும் வழக்கறிஞரான P.ஆண்டனி அரவிந்த் என்பவரும் அவரது நண்பரான வெங்கடேஷ் என்பவரும் எதிரியின் கணவருக்கு நண்பர்கள் ஆவார்கள். எங்கள் அலுவலகத்தில் கணினி பழுதடைந்தால் மேற்படி வெங்கடேஷ் என்பவர் எதிரியின் கணவரையும் அழைத்து பழுதடைந்த கணினிகளை சரிபார்ப்பார்கள்.

3. 2016 முதல் 2018 ம் ஆண்டு வரை எதிரியின் கணவருக்கு கோவை நீதிமன்றத்தில் காசோலை மோசடி வழக்கு நிலுவையில் இருந்து வந்ததால் அது குறித்த சந்தேகங்கள் கேட்பதற்கு எதிரியின் கணவர் P.ஆண்டனி அரவிந்த் வழக்கறிஞரை சந்தித்த வகையிலும் எனக்கு எதிரியை பழக்கம்.

4. மேற்படி விபரங்களை எனது புகாரில் நான் கூறவில்லை. கோவை 100 அடி ரோட்டில் எதிரி தொழில் செய்து வந்தார். அவருடைய அலுவகத்திற்கு எதிரியின் கணவர் என்னை அழைப்பார். அங்கு சென்று வந்த வகையில் எதிரியை எனக்கு தெரியும். மேற்படி விபரத்தை குறிப்பிட்டு என் புகாரில் கூறியுள்ளேனா என்றால் இல்லை எதிரியை எனக்கு அறிமுகம் என்று மட்டும் கூறியுள்ளேன்.

5. எதிரியின் அலுவகத்திற்கு சுமார் 4, 5 முறை சென்றுள்ளேன். 2019 ம் வருடத்திற்கு பிறகுதான் நான் எதிரியின் கடைக்கு சென்றுள்ளேன். எதிரியின் கடையின் விலாசம் என்ன என்றால் டோர் நம்பர் தெரியவில்லை. 100 அடி ரோட்டில் உள்ள மதானி காம்ப்ளக்ஸில் எதிரியின் கடை உள்ளது. 2019 ம் வருடம் முதல் 2020

வரை எதிரி நான் கூறியவாறு மேற்படி 100 அடி ரோட்டில் உள்ள மதானி காம்ப்ளக்ஸில் எந்த கடையும் நடத்திவரவில்லை என்றால் சரியல்ல.

6. எதிரி மற்றும் எதிரியின் கணவர் என் வீட்டிற்கு வந்து கடன் பெற்றார்கள். நான் எனது பூர்வீக சொத்தை விற்றிருந்தேன். அதற்குண்டான ஆவணத்தை தேவைப்பட்டால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். ரூபாய் 4 லட்சம் எனக்கு பெரிய தொகை என்றால் சரிதான். 2019 - 2020 கால கட்டத்திற்கு நான் வருமான வரி தாக்கல் செய்துள்ளேன்.

7. மேற்படி வருமான வரி கணக்கில் எதிரிக்கு நான் கொடுத்ததாக கூறப்படும் ரூபாய் 4 லட்சம் தொகையை கணக்கு காட்டியுள்ளேனா என்றால் தற்போது நினைவில்லை. மேற்படி வருமான வரி கணக்கை என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலும்.

8. எதிரி என்னிடம் கடன் பெற்றதாக சொல்லப்படும் சமயத்தில் எதிரியிடம் நான் பிராமிசரி நோட்டு பெற்றுக்கொண்டேன். 2 மாதங்கள் கழித்து எதிரியிடம் நான் பணத்தை திருப்பி கேட்டபோது எதிரி தனது காசோலையை எனக்கு கொடுத்தார். காசோலை வசூலாகிவிடும் என்று எதிரி கூறியதாலும், அதற்கு எனது நண்பர் வெங்கடேஷ் உத்திரவாதம் கூறியதாலும் காசோலையை பெற்றுக்கொண்டு பிராமிசரி நோட்டை எதிரியிடம் திருப்பி கொடுத்துவிட்டேன்.

9. பிராமிசரி நோட்டின் ஒளி நகல் ஏதேனும் எடுத்துள்ளேனா என்றால் அவ்வாறு எடுக்கவில்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் நான்தான் கையொப்பம் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தில் எனது நண்பர் வெங்கடேஷ் எதிரிக்கு நான் கடன் கொடுத்தாக கூறப்படும் சமயத்திலும், காசோலை கொடுத்ததாக கூறப்படும் சமயத்திலும் உடன் இருந்ததாக கூறவில்லை என்றால் சரிதான். தேவைப்பட்டால் அவரை எனது சாட்சியாக விசாரிக்கிறேன்.

10. எனது சட்ட அறிவிப்பில் பிராமிசரி நோட்டை எதிரி திருப்பி கேட்டதாக எதுவுமே நான் கூறவில்லை என்றால் எதிரி கேட்டதால்தான் கொடுத்தேன். எதிரி எனக்கு 2 மாதங்கள் வட்டி கொடுத்ததாக நான் கூறியுள்ள நிலையில் எந்த தேதியில், எவ்வளவு வட்டி தொகை கொடுத்தார் என்று என் புகாரில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான்.

11. ரூபாய் 20 ஆயிரத்திற்கு அதிகமாக ஒருவருக்கு கடன் கொடுக்க வேண்டும் என்றால் வங்கி பரிவர்த்தனையாக கொடுக்கவேண்டும் என்ற விதி எனக்கு தெரியும்

என்றால் சரிதான். மேற்படி விதி எனக்கு தெரிந்துள்ள பட்சத்தில் ரூபாய் 4 லட்சம் எதிரிக்கு கடன் கொடுத்ததாக கூறுவது ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் எத்தனை பேருக்கு வட்டிக்கு பணம் கொடுத்துள்ளேன் என்றால் நிறையபேருக்கு கொடுத்துள்ளேன்.

12. மணி லெண்டர் லைசென்ஸ் இல்லாமல் வட்டிக்கு பணம் கொடுப்பது சட்டப்படி குற்றம் என்றால் சரியல்ல. 2021ம் வருடம் சட்டப் படிப்பில் அரியர் தாள்களை நான் கிளியர் செய்துவிட்டேன். சர்கார்சாமக்குளம் கிராமத்தில் வட்டார வளர்ச்சி அலுவலராக பணி புரிந்து வரும் சுந்தரம் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

13. எதிரிக்கு வெறிகோஸ் பெயின் என்ற உடல் நலக் குறைவு இருப்பது எனக்கு தெரியாது. மேற்படி உடல் நல குறைவு இருப்பதால் 2017 – 2018 காலகட்டத்தில் எதிரி நடத்தி வந்த பிரின்சஸ் பொட்டிக் என்ற கடையை மூடிவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

14. 2019ம் வருடத்தில் எதிரியின் கடைக்கு நான் சென்றதாக கூறுவது பொய்யான சங்கதி என்றாலும், அச்சமயத்தில் எதிரி கடை எதுவும் நடத்தவில்லை என்றாலும் சரியல்ல. 2014 - 2015 காலகட்டத்தில் மேற்படி சுந்தரம் என்ற நபரிடம் ரூபாய் 3 லட்சத்து 50 ஆயிரம் கடன் பெற்று அவரிடம்தான் எதிரி இந்த வழக்கில் உள்ள காசோலையை கொடுத்தார் என்றால் சரியல்ல.

15. வழக்கு காசோலை தவிர 958256, 958257 என்ற எண்கள் கொண்ட காசோலைகளையும் சேர்ந்து மொத்தம் 3 காசோலைகளை எதிரி மேற்படி சுந்தரத்திடம் பிணையத்திற்கு கொடுத்து வைத்திருந்தார் என்றால் வழக்கு காசோலைகள் தவிர பிற காசோலைகள் பற்றி எனக்கு தெரியாது. எதிரியின் வங்கி கணக்கு கடன் கணக்கு என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

16. மேற்படி 3 காசோலைகளுக்கும் எதிரி Stop payment குறிப்பு தனது வங்கியில் கொடுத்து வைத்திருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரி கடன் பெற்றதாக கூறப்படும் சமயத்தில் எதிரியின் கணவர் கோவை, ராம் நகர், ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா கிளையில் ரூபாய் 2 லட்சத்திற்கு Fixed deposit வைத்திருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

17. எதிரி என்னிடம் கடன் பெறவேண்டிய அவசியம் இல்லை என்றாலும், எதிரிக்கு தேவையாக தொகை அவரிடம் உள்ளது என்றாலும் சரியல்ல. எதிரியின்

வீட்டு விலாசம் எனக்கு தெரியாது. கடைக்குதான் நான் சென்றுள்ளேன். சுந்தரம் என்பவரிடம் வாங்கிய கடனை எதிரி முழுவதும் செலுத்திவிட்டார் என்றாலும், சுந்தரம் என்பவர் என் மூலமாக இவ்வழக்கு காசோலையை தாக்கல் செய்துள்ளார் என்றாலும் சரியல்ல.

18. வழக்கு காசோலை Crossed cheque ஆகும். காசோலையில் உள்ள கையொப்பத்திற்கும் பிற சங்கதிகளுக்கும் எழுதப்பட்ட மையில் வித்தியாசம் காணப்படுகிறது என்றால் சரியல்ல. எதிரி எனக்கு காசோலை கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கு காசோலையில் ஒரு நிறுவனத்தின் நிறுவனர் என்பதாகதான் காணப்படுகிறதே தவிர எதிரியின் தனிப்பட்ட பெயர் காணப்படவில்லை என்றால் சரிதான்.

19. எதிரியின் கடைக்கு நான் என்றுமே சென்றதில்லை என்றாலும், இன்டர்நெட்டில் எதிரியின் கடையின் விலாசத்தை எடுத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பொய்யான ஆவணத்தை தாக்கல் செய்து பொய் சாட்சியமளிப்பதால் என் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றால் சரியல்ல.

(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க வழக்கு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/M.A.Suvedharanyan)
Judicial Magistrate No.I,
Pollachi.